(இ) ஆமெனில்; இப்பணி எப்போது துவக்கப்படும் ?

(உ) இதன் மதிப்பீடு யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் இல்லே, குட்டை அமைக்கும் திட்டம் உள்ளது.

(இ) & (உ) இதன் மதிப்பீடு ரூ. 24,000.

(பிற்பகல் 4–20)

திரு. எல். பலராமன் : தலேவரவர்களே, இதை பொதுப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு சில பகுதிகளிலும் இது போன்ற நீர் குட்டைகள் அமைக்க வேண்டும் என்று எல்லா மாவட்டங்களிலும் திட்டமிடப்பட்டு, அதைக் குறித்து அரசு பரிசீலித்ததே, அதனுடைய முடிவு என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலேவரவர்களே, குட்டையாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்து ரூ. 24 ஆயிரம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

திரு. கே. ராஜாசாம் : உங்கள் பாலிஸி என்ன என்றுதான் அவர்கள் கேட்கின்ருர்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலேவர்களே, எல்லா மாவட்டங்களிலும் குட்டைகள் அமைக்கின்ற திட்டம் நடைமுறையில் இருந்து வருகின்றது. முழு விவரம் என்னிடத்திலே இல்லே. எல்லா மாவட்டங்களிலும் இது போன்ற திட்டம் அமைத்துக் கொண்டு வரப்படுகின்றது.

Housing Scheme at Krishnagiri

*187 *Q.*—THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether there is any proposal to construct houses at Krishnagiri under 10 per cent Scheme of the Tamil Nadu Housing Board ;

(*b*) if so, whether any amount has been collected from the public; and

(*c*) how long it will take to execute the Scheme?

இருட்டிணகிரியில் வீடு கட்டும் திட்டம்

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 10 விழுக்காடு திட்டத்தின் கீழ் கிருட்டிணகிரியில் வீடு கட்டும் திட்டம் ஏதும் உள்ளதா ?

1975 மார்ச் 25]

(இ) ஆமெனில், அதற்குரிய நிதி பங்கீடு மக்களிடமிருந்து பெறப்பட்டதா ?

(உ) இத்திட்டம் நிறைவேற எவ்வளவு காலம் ஆகும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 32 வீடுகளைக் கட்ட இருக்கிறது. 26 வீடுகளுக்கு நிதிப் பங்கீடு பெறப்பட்டுள்ளது.

(உ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தை 1975–76 ஆண்டின் முடிவிற்குள் நிறைவேற்றிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, இந்த வீடுகள் யார் யாருக்கு வழங்கப்படும் என்பதைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீடுகள் என்ற அளவில் பத்தாயிரம் ரூபாயில் இந்த வீடு கட்டுவது என்ற திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. பத்து சதம் முன்பணமாகக் கொடுப்பவருக்கு இந்த வீடு தரப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு ஒரு ரூபாய் அல்லது ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் . என்று கட்டினால், அதற்குரிய விதத்திலே ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் கீழ் இது வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அது வேறு திட்டம், இது வேறு திட்டம். தினசரி ஒரு ரூபாய் கட்டினால், ஐந்தாண்டுகள் கழித்து ஒரு வீடு கிடைக்கும். பத்தில் ஒரு பங்கு கட்டினால், ஒரு குறைந்த அளவு காலத்தில் இரண்டு அல்லது மூன்று மாதம் அல்லது ஐந்து அல்லது ஆறு மாதத்தில் இந்த வீடு அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Solvency Certificates for Trustees

* 188 *Q*.—THIRU S. S. THENNARASU (on behalf of THAVATHIRU KUNDRAKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government have received any representation to the effect that the members of the Scheduled Castes who are appointed as Trustees of Temples should be exempted from producing Solvency Certificates ; and

(*b*) if so, the steps taken thereon by the Government?